உ

கடவுள் துணை.

துரோபதையம்மன்பேரில் விருத்தம்.

முராஹரி அச்சுக்கூடம்

T. செங்கல்வராய நாயுடு அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

ஒவ்வொருவருக்கும் மனோல்லாஸத்தைக் கொடுக்கும்
ஜப்பான் தேசத்து அழகிய
பட்டு அங்கவஸ்திரங்கள்.
விலை அங்கவஸ்திரம் 1-க்கு ரூபா 4.
வி. பி. தபால் சிலவு கிடையாது இனாம்.



சிநேகிதர்களே,

இந்த அங்கவஸ்திரங்கள் அழகிய கண்ணையும் மனதையும் கவரும்படியான கலர்களில் மெல்லிய உடையாக செய்தது, இதை கலியாணம் முதலியசுப காரியங்களுக்கும், திருவிழா கோயிலுக்குப்போகும்போது சொக்காயின்மீது போட்டுக்கொண்டுபோனால் மிகமனோஹரமாயிருக்கும், சிறு பெண்குழந்தைகள் மேல் தாவணியாக உபயோகிக்கலாம், பூசை சமயத்தில் மடிக்கு கட்டலாம். இதை பத்திரப்படுத்தி நைஸாக உபயோகித்துவந்தால் அநேககாலம் உழைக்கும். இதில் மஞ்சள், பச்சை, சிகப்பு, ரோஸ், ஊதா கலர்கள் உண்டு உமக்கு வேண்டிய கலருக்கு எழுதுங்கள், 5½ முழ நீளம் 2½ முழ அகலமுள்ளது. இதை பிறருக்கு இனாம்கொடுக்கவும் அனுகூலமானது, எமது வியாபார நண்பர்களின் வேண்டுதலால் சொந்தமாக வரவழித்து ஆயிரக்கணக்கான அங்கவஸ்திரங்கள் சிலவாகிறது. வேண்டியவர்கள் அதன் விலையை கண்டெழுதுவதுடன் உமது விலாசத்தையும் விவரமாக தெரியும்படி எழுதவேண்டியது.

எமது விலாசம்:— ஜனோபகார நிலயம்.,

நெ 56 கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்துவீதி. சென்னை.

உ

சிவமயம்.

துரோபதையம்மன்பேரில்

விருத்தம்.

சீர்பெற்றவுலகினில் துவாபரயுகத்தினில் ஜென்மித்து ஐவராக, செங்கோலுக்கதிபதி தர்மபுத்திரர் வீமர் தனஞ்செய நகுலசாதா, பேர்பெற்ற திருதராட்டிரன் மைந்தன் துரியனுடன் சூதாடி புவிதோர்த்துதான் தேவிபாஞ்சாலியும் ஐவரும் வனவாசம் சென்றுதான் பன்னிரண்டு, நேர்பெற்ற வஞ்ஞாதம் ஓராண்டு செல்லவே நின்றுதான் விராடபுரத்தில், நெடியமால் தயவினால் பாரதமுடிக்கவே நிகரிலாப் போராபுரிந்து. மாருத்ததுரியன் மேல் நின்றுதான் கூந்தல்வாரியே முடித்தவுமையே வணர்க்கிளி கதம்பமணி குன்றமவசந்தனெரி மதிரூபபாஞ்சாலியே. 2

நீடாளும்பாஞ்சால னெக்கியன்தன்னிலேநீயொரு பெண்பிறந்தாய், நெடியதொருவில்தனை வளைத்தவர்தம

க்குநீ நிட்சயந்தருவனென்றாய், ஜோடாகசுயம்வரஞ்
சாட்டியதுருபதன் துரோபதைதனைத்குமணமே, சொல்
லரியதுரியோதிர ராசனுந்தம்பிமார் தொல்புவிமன்னவ
ர்களும், ஆடாதவில்தனை நாணேரிடாமலே அவமதிப்ப
ட்டேகிறச, அப்போதுவனவாசம் காட்டினில்திரிந்தவர்க
ளைவருந்தானிருக்க, வாடாதவில்தனை வளைத்துதானர்ச்
சுனன் மாலைதானிட்டுக்கொண்டார், வனக்கிளி கதம்ப
மணி குங்குமவசந்தவெளி மதிருபபாஞ்சாலியே. 2

தர்மமேநித்தியம் தர்மமேமுத்தியும் தர்மருங் கொ
லுவிருக்க நாஷ்டீகவீமனும் அர்ச்சுனனும் நகுலசகா
தேவ னருகிருக்க, வாழுள்ள தேவியுனை ஐவர்க்கும்பாரி
யாய் மாதுநீயருகிருக்க ஆயினீ யொருவர்க்கும் பாரியும
ல்லகாண் மற்பொருது பார்க்கவந்தாய், சாருத்தபோரி
னில் ஐவரையுங் கொண்டுவந்து சபதமே முடித்தவுமையே
சங்கரி பார்வதி யுந்தனிட மகிமையால் சாற்றவே முடி
யுமோதான், வர்மகுண வஞ்சியே மாயோன் சகோதரி
வந்தென்னை ரட்சிந்திடும் வனக்கிளி கதம்பமணி குங்
குமவசந்தவெளி மதிருப பாஞ்சாலியே. 3

பஞ்சவரை அரியனும் விருந்துக்கு வாவென்று மரிவாகவே யழைத்து பாதகன் ஜகுனியும் வசனுபிலையமு கலந்துபசரித் தமுதளித்தான் வஞ்சனையறிந்துதான் மாயவர் கிருஷ்ணரும் வண்டாய்ப் பறந்துவந்து மணிரத் னதீபத்தை யணைக்கவே பஞ்சவர்கள் மனம்வாடி திகைத்துநின்றார், நெஞ்சினில் கபடமது மில்லாத விமனும் நிறைந்த வமுதேயுநட்டி நெடியமால்கயவினுல் பசியாறி விமனும் படுக்கைபால் மூர்ச்சையானன், வஞ்சியேதுவாபமணி மாலையர் வைத்தியராய் வந்துமே வுயிரளித்தார் வனர்க்கிளி கதம்பமணி குங்குமவசந்தநெரி மதிருப பாஞ்சாலியே. 4

ஐவரையுங்கொண்டுபோய் அரக்குமாளிகைபினிலடைத்துதான் துரியோதிரன், அரிகண்டவிலக்கிட்டு அக்கினியைமூட்டினன் அப்போதுதர்மர்தானும், செப்பும்வகை யேசென்று தேவரீர் மாயவரைசிந்தையில்நினைந்தபோது செந்துளப மாலையர் வந்துதானைவரையும் தற்காத்து ரட்சித்தனர், தையலகள் துரோபதையைச் சபையிலே கொண்டுவர தம்பிதுற்சாதனத்தான் சற்றுந் தயவில்லாமல் பத்தினிதுபில்தனை கத்தரித்தேயுரித்தார் வையகமளந்தவரை மனதினினைந்திட மாளாத்துகிலளி

த்தார் வனர்க்கிளி கதம்பமணி குங்குமவசந்தநெறி மதி
ரூப பாஞ்சாலியே. 5

பன்னிரண்டாண்டுதான் சென்றுமேவனவாசம் பருகியே அக்யாதந்தர்ன், பாராளும்விராடனூர் பக்கலில்ஜவரும் பத்தினிமறுவேடமாய், தனியாகமயல்கொள்ள கீசகன்தனைக்கொல்ல தாஷ்டீகவீமன்றானும், தாக்கிய அர்ச்சுனன் சண்டைக்குமாமிபிடி சாரதிமாயன்றானும், பனிசூழும்பாராளும் துரியனூர்பக்கலில் பாலகனை தூதனுப்ப, பாதிநாடாளவே ஐந்தூருகேளுமென்பகரவேமாமனூர்க்கு, வாணிசூழஸ்தினபுரந்தனிலேகியே மாயவர் தூதுசென்றார், வனர்க்கிளி கதம்பமணி குங்குமவசந்த
நெறி மதிரூப பாஞ்சாலியே. 6

பாரதம்பதினெட்டு நாளுமேசென்றபின் பரிவான தர்மமருக்ரு பட்டாபிஷேகமே சட்டியேமகுடமுடிபண்பாகவே சூட்டியே, சாரதியானதொரு மாயவர்வந்துதான்சதுர்மறைகள் தானோதியே, சாத்தியேயரசாளும் செங்கோல்செலுத்தியே தர்மராஜனென்றுபோற்ற, வீரவாளுருவியே தம்பிமார் நால்வரும் வீரியேபக்கம்நிற்க, வீரதப்பட்டமும் முரசவல்லாரையும் விருதுடனூர்ப்பரிக்க

வன்னித்துரோபதாள் பட்டபூதேவியும் வந்துதானருகி ருக்க வணர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தகெரி மதி ரூப பாஞ்சாலியே. 7

உலகமது ஆண்டபின் கலிபிறந்ததுவென்று ஒன்று கதம்பிமாரும், உமைவள் துரோபதை மாதேவஞ்சொ ல்லவே உடல்விட்டுவைகுந்தம்போய், நிலைமையுடன்த ர்மரும் வொண்டியாய்வைகுந்தம் நெடியமால் பாதம் பெற, நிகரிலாமாயவன் கெருடனையழைத்துமே நீபெதி ராகுமென்றார், கல்மதிர்க்குலந்தனை விமானத்தில் வைத் துடன் காட்டினார்வைகுந்தமே, கலியுகந்தன்னிலே அறி யவேயனைவர்க்கும் கண்கண்டதெய்வமானீர், வரம்பெறு மடியார்கள் பங்கிலுறைவஞ்சியே மாதுனீ துரோபதம் மாள் வணர்க்கிளி சதம்பமணி குங்குமவசந்தகெரி மதி ரூப பாஞ்சாலியே. 8

கொந்தமுங்கொடிகளும் குமாரவர்க்கங்களும் கொக் க்கரித் தண்டமதிர கூட்டமிட்டேயொரு,பேய்களும்பூத மும் குருமுனிவன்பயில்லி, விந்தைபாஞ் சாகினி யிடா கினி யிரிசூலி காட்டேரியும், வீரவீராக்களும் ராட்சத கணங்களும் விடுபட்ட ராவிரிஷியும், உந்தன்வீரபண் டாரமும் சாட்டியும் மணிகளும் காணவே திடுக்கிட்டு தான் ஓயம்மே ஒயம்மே சோய்போயினேனென்று நடு

மேகொக்கரித்து, வந்து நீ அடியேனைகாத்துரட்சித்திடும் மகாவீரபாஞ்சாலியே வளர்க்கினி சதம்பமணி குங்கும வசந்தரெரி மதிரூப பாஞ்சாலியே. 9

பத்துமேபக்தியடன் பாடினேனுன்மீதில்பராசத்தி துரோபதம்மா பாஞ்சாலகன்னியே வீரமல்லாரியே பத்தினி பரமேஸ்வரி, நித்தமு முன்பாதமலர் நினைவிலே நினைந்திட நிற்குமோ பவங்களம்மா நீலி பாஞ்சாலிநீ ஆலகபாலியே நெடியமால் தங்கையம்மா,உத்தமி துரோபதாள் நித்தியகல்யாணியே யோங்காரவீரசத்தியுல்லாச காமிநீ சல்லாபூவாணி நீயுமைபபாஞ்சாலிகன்னி, வைத்திடும்சித்தமென் வல்வினையைநீக்கிவிடும் மகாவீரபாஞ்சாலியே. வளர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்த ரெரி மதிரூபபாஞ்சாலியே. 10

துரோபதையம்மன்பேரில்விருத்தம்

முற்றிற்று.